# 13

# “பரிசுத்தவான்களுடைய சபைகள்”

*“தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லா வற்றிலேயும் அப்படியே இருக்கிறது” (1 கொரி. 14:33).*

சில வேளைகளில் நாம் ஒரு பொருளை அல்லது செயலை, தவறாகப் பெயரிட்டுவிடுகிறோம், மற்றும் அத்தவறானது ஏதோ சில காரணங் களினால் ஒருக்காலும் திருத்தப்படாமல் போகின்றது. நிலைத்த பயன் பாட்டின் மூலமாக, அந்தத் தவறானது ஒரு மொழி வழக்கமாகிவிடுகின்றது, மற்றும் நாம் ஒரு உண்மை நிலை அல்லது சிந்தனைக்கு மிகச் சரியற்ற சொல் விளக்கத்தைப் பயன்படுத்துவதில் அடைபட்டவர்களாகி விடுகின்றோம்.

எடுத்துக்காட்டாக, கார் விபத்து ஒன்றில் ஒரு மனிதர் அகப்பட்டுக் கொண்டார். அவர் காயம் அடையவில்லை, ஆனால் அவருடைய காரானது மிக மோசமாகச் சேதமடைந்து, அவ்விடத்திலிருந்து ஓட்டிச் செல்ல முடியாதபடியாகி விடுகின்றது. அவ்வழியே சென்றவர் ஒருவர் இத்துன்பத்தில் உதவுவதற்கு முயற்சி செய்யும் வகையில், விபத்தில் அகப்பட்டவரிடம், “நான் உங்களுக்காக ஒரு (wrecker) பழுதடைந்ததை இழுத்துச் செல்லும் வண்டியை அழைக்க நீங்கள் விரும்புவீர்களா?” என்று கேட்டார். வெறுப்பான அந்த மனிதர், “எனக்கு wrecker தேவையில்லை. Wreck ஏற்கனவே நடந்து விட்டது. எனது சேதமுற்ற காரை இங்கிருந்து வெளியே எடுப்பதற்கு எனக்கு இழுவை வண்டியொன்றுதான் இப்பொழுது தேவை!” என்று கூறினார். அவர் சரியாகவே கூறினார் அல்லவா? சேதங்களை நீக்கப் பயன்படுத்தும் வண்டியை நாம் “wrecker” என்று அழைக்கின்றோம்; ஆனால் அதே வண்டியானது நம்மை நோக்கி சாலையில் வரும் பொழுது, அந்தப் பெயரானது தவறான சொல் வழக்காய் உள்ளதாக நாம் நம்புகின்றோம்.

மொழியின் வளர்ச்சியில், ஒரு நல்ல வார்த்தையானது உண்மையில் அது கொண்டிராத அர்த்தத்தைக் கொண்டு பயன்படுத்தப்படுவது என்பது அடிக்கடி நடைபெறுகின்றது. இந்தக் கருதுகோளானது நமக்கு, மொழியை அறிந்திருத்தல் என்பது மட்டுமே செய்தித் தொடர்பை உத்தரவாதப்படுத்து வதில்லை என்பதை நினைவூட்டுகின்றது. சிந்தனைகளின் உண்மைப்

பரிமாற்றத்திற்கு முயற்சி தேவைப்படுகின்றது. குழப்பத்திற்குள்ள வலிவான வழியின் காரணத்தினால், பொருள்களைத் தவறாகக் குறிப்பிடுதல் மற்றும் வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்ற ''மொழி விபத்துக்கள்'' அல்லது ''பேச்சுச் சறுக்கல்கள்'' ஆகியவை குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், மற்றும் நாம், இந்த மொழியியல் பிறழ்வுகள் என்பவை ஒரு முக்கியமான பாடக்கருத்து அல்லது ஆய்வுப் பொருளை நாம் தவறாகப் புரிந்து கொள்ள வழிநடத்தாதவாறு நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும்.

குழப்பமூட்டும் வார்த்தைகள் பற்றிய இந்தச் சிந்தனைகளுடன் நாம் நமது மனதில், ''பரிசுத்தவான்'' என்ற வார்த்தையின்மீது கவனம் செலுத்துவோம். இது, 1 கொரிந்தியர் 14:33ல் கிறிஸ்துவின் சபைகள் பற்றிப் பவுல் எழுதிய பொதுக் குறிப்பில், பன்மை வடிவத்தில் காணப்படுகின்றது: ''தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.'' ''பரிசுத்தவான்களுடைய சபைகள்'' என்ற சிறப்புப் பெயரானது ஆர்வத்திற்குரியதாகவும் மற்றும் தகவல் தருவதாகவும், ஒளியூட்டுவதாகவும் மற்றும் மறைவான கருத்துடையதாகவும், சபையில் உள்ள மக்கள் யார் என்று அடையாளப்படுத்த இன்னொரு குறிப்பை நமக்குத் தருவதாகவும் உள்ளது. இந்த வசனத்தின்படி, ''பரிசுத்தவான்'' என்ற சொற்றொடரின் வேதாகம ரீதியான அர்த்தத்தின் கருத்தை ஒருவர் புரிந்து ஏற்றுக் கொள்ளாத வரையில், சபையின் கருத்து பற்றி அவர் முழுமையான புரிந்து கொள்ளுதலை அடைய முடியாது.

## சொற்றொடர் அடையாளப்படுத்தப்படுகின்றது

''பரிசுத்தவான்'' என்ற சொற்றொடரானது தேவபக்தியில் நன்கு அறியப்பட்டுள்ள ஒரு மனிதரைக் குறிப்பிட தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலர், ''அந்த மனிதர் உண்மையிலேயே ஒரு பரிசுத்தவான்!'' என்று கூறுகின்றனர். இது, சுட்டிக்காட்டப்படும் அந்த மனிதர், பரிசுத்தவான் என்று அழைக்கப்படுவதை அவரே ஈட்டியுள்ளார் என்பது போன்று உள்ளது.

இந்தச் சொற்றொடரானது மேன்மையான விசுவாசம் நிறைந்த ஊழியத்தில் மரித்துள்ளவர்களுக்கு மட்டும் கூடப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்வார்த்தையை அவ்வகையில் பயன்படுத்துகின்றவர்கள், எவரொருவரும் மரித்து, அலுவலக முறைப்படி பரிசுத்தவான் என்று ஏற்றுக் கொள்ளப்படும் வரையிலும் அவருக்கு இச்சொற்றொடரைப் பயன் படுத்துவதில்லை. ''பரிசுத்தவான்'' என்ற வார்த்தைக்கான இவ்விரண்டு விளக்கங்கள் அல்லது பயன்பாடுகள் வேதாகம ரீதியான, வசனத்தின் ஏவுதல் பெற்ற பயன்பாட்டை ஏற்றுக் கொண்டிருப்பவை அல்ல.

இந்த வார்த்தையானது, ''கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களை'' (யாவரையும்) எளிமையில் அர்த்தப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் சீராகப் பயன்படுத்தப்படுகின்றது. பவுல் பிலிப்பியருக்கு

*எழுதிய நிருபத்தில் இந்தப் பயன்பாட்டின் உதாரணம் ஒன்று காணப்படுகின்றது. கடிதத்தின் முன்னுரை அல்லது முகப்பில் அவர், "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது" (பிலி. 1:1) என்று எழுதினார். இந்த நிருபத்தை முடிக்கையில் அவர், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள். என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். பரிசுத்தவான்கள் அனைவரும், … உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (பிலி. 4:21, 22) என்று கூறினார். பவுல் தாம் இதை எழுதிய பொழுது இருந்த பகுதியின் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வரையும் பரிசுத்தவானாகவே மதித்தார், மற்றும் அவர் எந்த நகருக்கு எழுதினாரோ, அங்கிருந்த ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பரிசுத்தவான் என்ற வகையிலேயே அவர் கண்ணோக்கினார்.*

*''பரிசுத்தவான்'' என்ற வார்த்தைக்குள்ளாகவே, ஒருவர் ''பரிசுத்த பயன்பாட்டிற்கென்று பிரித்து வைக்கப்படுதல்" அல்லது "தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுதல்" என்ற கருத்து மறைந்துள்ளது. கிறிஸ்தவர் என்பவர் தம் மனமாற்றத்தின்போது நிலைப்பாட்டில், கொள்கையில் ஒரு பரிசுத்தவானாகின்றார். சுவிசேஷத்தின் மூலம் அவர் தெய்வீக ஊழியத்திற் கென்று பிரித்து வைக்கப்படுகின்றார். மனமாற்றத்திற்கு முன்பு அவர், பிசாசுக்கும் உலகத்துக்கும் உரியவராக, மாம்சத்தின் இச்சையினால் ஆட்கொள்ளப்பட்டவராக இருந்தார்: ஆனால் மனமாற்றத்தில் அவர் தேவனுடைய உடமையாக அல்லது நபராக ஆகின்றார் (1 பேது. 2:9).*

*இந்த விதத்தில், எல்லாக் கிறிஸ்தவர்களும் புதிய ஏற்பாட்டில் பரிசுத்தவான்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். சவுல் இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு நமது கர்த்தர் அனனியாவைச் சவுலிடம் செல்லும்படி அறிவுறுத்தினார். அந்தக் கட்டளைக்கு அனனியா பதில் உரை கொடுத்த வகையில் எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களை இந்தச் சிறப்புப் பெயரினால் அழைத்தார்: ''ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்'' (அப். 9:13). பேதுருவின் சுவிசேஷப் பயணங்கள் பற்றிய அறிக்கையில் லூக்கா, லித்தாவில் இருந்த கிறிஸ்துவின் பின்பற்றாளர்களைப் பற்றி ''பரிசுத்தவான்கள்'' என்று பெயரிட்டு அழைத்தார்: "… அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்" (அப். 9:32). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் செயல்களைக் குறித்து எழுதினார், இதன் தொடர்பாக அவர் தேவனுடைய பிள்ளைகள் யாவரையும் பரிசுத்தவான்களாக விவரித்தார்: ''ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்''*

(ரோமர் 8:27). பரிசுத்தவான்கள் அதாவது, தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்காகவும் பரிசுத்த ஆவியானவர் வேண்டுதல் செய்கிறார் என்று அவர் கூறினார். இந்த வசனப்பகுதிகள், ''பரிசுத்தவான்'' என்பது "கிறிஸ்தவர்" அல்லது "கிறிஸ்துவுக்குள்ளானவர்களை" விவரிக்கும் வேறு எந்த விளக்கத்திற்கும் இணையான புதிய ஏற்பாட்டுச் சொற்றொடராக உள்ளது என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

"பரிசுத்தவான்" என்ற வார்த்தையானது "பரிசுத்தமான ஒருவர்" என்று மொழிபெயர்க்கப்பட முடியும், மற்றும் "பரிசுத்தமாக்க," "பரிசுத்தமாக்கப் பட்ட," "பரிசுத்தமாக்கப்படுதல்" என்பது போன்ற இதன் தரவழைப்புகள் ''பரிசுத்தவானாக்கப்படுதல்'' அல்லது ''பரிசுத்தமாக்கப்படுதல்'' என்று அர்த்தப்படுகின்றன. பவுல், "கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிற தினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்'' (2 தெச. 2:13, 14) என்று எழுதினார். விசுவாசிப்பவர், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவுக்குள் வருகின்றபொழுது, அவர் அல்லது அவள் ஆவியானவரால் சத்தியத்தின் மூலமாகப் பரிசுத்தமாக்கப் படுகின்றார் (யோவா. 17:17; 1 பேது. 1:1, 2).

1 கொரி. 14:33ல் உள்ள "பரிசுத்தவான்களின் சபை" என்ற சொற்றொடரின் சந்தர்ப்பப் பொருள் அமைப்பானது, ''பரிசுத்தவான்கள்'' என்ற வார்த்தையைப் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதையும் தெளிவாக்குகின்றது. இச்சொற்றொடரானது, சபை கூடி ஆராதிக்கையில் பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் பயன்பாடு குறித்து, பவுல் கொரிந்தியருக்குக்கொடுத்த விவரமான அறிவுறுத்தல்களின் முடிவில் வருகின்றது. நமது வேதாகமங்கள் அதிகாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ள வழிமுறையின்படி, அற்புத வரங்கள் பற்றிய அவரின் கலந்துரையாடலானது அதிகாரம் 12ல் தொடங்கி, அதிகாரம் 14ல் முடிவடைகின்றது. இது 1 கொரிந்தியரில் உள்ள அவருடைய மிகவும் நீளமான தலைப்பு விளக்கங்களில் ஒன்றாக உள்ளது. இந்தப் போதனைகள், முதல் நூற்றாண்டில் இருந்த சபைகளில் ஒழுங்குகள், அமைதி நிறைந்த ஆராதனை ஊழியங்கள் இருக்கும்படியாக அறிவுறுத்துவதற்கென்று விசேஷமாய்க் கொடுக்கப்பட்டன.[1] அவர்களுடைய சபை கூடிவருதல்கள் என்பவைகள் ஒழுங்கமைவின்மை மற்றும் குழப்பம் ஆகியவற்றினால் நிறைந்திருந்ததால்[2] தகுதியான ஆவிக்குரிய ஒழுங்கு முறைமை பற்றிய புத்திமதியைக் கொண்டு இந்தக் குழப்பமான சூழ்நிலையைத் திருத்தும்படியாகப் பவுல் நாடினார். அவருடைய வேண்டுகோளானது இதற்கு மிக பரவலான அமைவைக் கொண்டிருந்தது. பவுல் சாராம்சமாக, "தேவனுடைய சபைகள் எல்லாவற்றிலும் அவருடைய செல்வாக்கு செலுத்துதலானது சமாதானத்திற்குரியதாயிருக்குமேயன்றி குழப்பத்திற்குரியதாய் இராது" என்றே கூறினார்.

அவருடைய புத்தி கூறுதலானது "பரிசுத்தவான்களுடைய சபைகள்" அல்லது "தேவனால் பிரித்து எடுத்து வைக்கப்பட்ட மக்கள்" என்ற வகையில் தேவனுடைய சபைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகின்றது.

1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்கள் (1 கொரி. 1:2; 2 கொரி. 1:1), பிலேமோன் (வ. 5), எபேசியர் (1:1), பிலிப்பியர் (1:1) மற்றும் கொலோசெயர் (1:2) ஆகியவற்றின் தொடக்க வாழ்த்துக்களில் "பரிசுத்தவான்கள்" என்ற வார்த்தையும் "சபை" என்ற வார்த்தையும் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் பல்வேறு பிரச்சனைகள் மற்றும் தவறான போக்குகளினால் பாதிக்கப்பட்டிருந்தனர், இதைப் பவுல் இந்த நிருபங்களில் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்; இருந்த போதிலும் பவுல் அவர்களைப் பரிசுத்தவான்கள் என்றே அழைத்தார். அவருடைய தொடக்க வார்த்தைகள், அவர்களுக்குக் கிறிஸ்துவுக்குள் அவர்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலித்தன, "கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது" (1 கொரி. 1:2). எனவே, கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எவரொருவரும் பரிசுத்தவானாகவே இருக்கின்றார், மற்றும் உண்மையான கிறிஸ்துவின் சபை எதுவும், பரிசுத்தவான்களின் ஒரு குழுவாகவே உள்ளது என்ற கருத்து தொடருகின்றது.

## சொற்றொடர் விவரிக்கப்படுகின்றது

"பரிசுத்தவான்" என்ற வார்த்தையில் பொதியப்பட்டுள்ள கருத்தானது, "ஜீவனுள்ள" உறுதிப்பாடு கொண்டுள்ளதாக அழைக்கப்படும் மக்கள் மீது வைக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது நமக்குக் கடமைப்பாட்டை உணர்த்துவது எப்படி என்பதைப் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் இரு சித்திரிப்புகள் நமக்குக் காண்பிக்கின்றன.

### *தேவனும் இஸ்ரவேல் இனமும்*

இந்த வார்த்தையின் பின்னால், இஸ்ரவேல் இனத்துடன் தேவனுடைய உறவானது சிறப்பாய்க் காணப்படும் பழைய ஏற்பாட்டுக் கருத்து ஒன்று உள்ளது. தேவன் தமது மீட்பின் நோக்கத்தைச் செயல்படுத்த மக்களினம் ஒன்றைத் தமது சொந்த இனமாகத் தேர்ந்துகொண்ட விஷயம்தான் பழைய ஏற்பாட்டின் இருதயம் போன்ற மையப் பகுதியாக உள்ளது. அவர் ஆபிரகாமைத் தேர்ந்து கொண்டு, அவரைத் திரளான கூட்டத்திற்குத் தகப்பனாக்குவதாக வாக்களித்தார் (ஆதி. 15:5). அவருடைய அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமானது ஈசாக்கு மற்றும் அவரது மகன் யாக்கோபு ஆகியோருக்கு விரித்துரைக்கப்பட்டது. யாக்கோபும் அவரது குடும்பமும் எழுபத்தி ஐந்து[3] பேர் கொண்ட ஒரு போதிய அளவிலான இனக்குழுவான போது, அவர்கள் எகிப்திற்குக் குடியேறினார்கள், அங்கு

அவர்கள் கடைசியில், கொடுங்கோலனான பார்வோன் ஒருவனால் அடிமைப்படுத்தப்பட்டார்கள். அடிமைத்தனத்தில் பல நூறு ஆண்டுகள் கடந்த பின்பு, யாத்திராகமம் புத்தகத்தின் துவக்க அதிகாரங்களில் பதிவு செய்துள்ளபடி, தொடக்கத்தில் இருந்த எழுபத்தி ஐந்து இஸ்ரவேலர்கள், எண்ணிக்கையில் 25 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட ஒரு இனமாக வளர்ந்திருந்தார்கள். அடிமைத்தனத்தின் காலத்தில் அவர்கள் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்தார்கள் என்பது கல்வியாளர்களால் இன்னமும் திகைப்புக்குரியதாக அறியப்படும் நிகழ்வாக இருக்கையில், ஆபிரகாமின் இந்தச் சந்ததியார் எண்ணிக்கை யிலான வளர்ச்சியில் தேவனால் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவன் அவர்களை மோசேயின் மூலமாக உபத்திரவத்தின் அக்கினியி லிருந்து, தேவனுடைய பர்வதமாகிய சீனாய் மலைக்குக் கொண்டு வந்து, அங்கே தேவன் அவர்களிடத்தில், "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத். 19:5, 6) என்று கூறினார்.

இஸ்ரவேலர் எப்பொழுதுமே தேவனுடைய பரிசுத்த இனமாக வாழ்ந்திருந்ததில்லை என்பது நிச்சயமானது; இருப்பினும், நிலைப்பாட்டில் அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக "பிரித்து வைக்கப்பட்ட" மக்களாகவே இருந்தார்கள். அவர்கள் நடைமுறையில் தேவனுடைய மக்களாய் இருக்கத் தவறிய பொழுது தேவன் அவர் களுடைய பாவத்தையும் கலகத்தையும் மன்னிக்கவில்லை. அவர் ஒருக் காலும் இதைச் செய்கிறவரல்ல. அவர் தம்முடைய பிள்ளைகளிடத்திலோ அல்லது வேறு எவரிடத்திலுமோ உள்ள பாவத்தைக் கண்டும் காணாமல் இருந்து விடுவதில்லை. அவனோ அல்லது அவளோ தேவனுடைய உடன் படிக்கைக்கு உள்ளேயோ அல்லது அதற்கு வெளியேயோ இருந்தாலும் ஒவ்வொரு நபரும் தனது வாழ்வைக் குறித்துத் தேவனிடத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும் (2 கொரி. 5:10). இருந்த போதிலும், இஸ்ரவேலர்கள் தேவனுடைய மக்களாக இருக்கும்படியாகப் பூமியில் உள்ள மற்ற மக்களினங்கள் எல்லாவற்றிலும் இருந்து தெய்வீகமாக அழைக்கப்பட்டார்கள். ஒரு கருத்தில் அவர்கள் பரிசுத்தவான்களாக, ஒரு பரிசுத்த இனமாக இருந்தார்கள்.

## தேவனும், லேவிய ஆசாரியத்துவமும்

"பரிசுத்தவான்" அல்லது "பரிசுத்தம்" என்ற சொல்லினால் தெரிவிக்கப் படும் சிந்தனையை, மோசேயின் யுகத்தின் ஆசாரியத்துவத்திலும் காண முடியும். பழைய ஏற்பாட்டின் ஆசாரியத்துவத்தின் அமைப்பானது மூன்று கால வேளைகளில் வந்ததாக இருந்தது. இவற்றில் முதலாவது நிலையானது மீட்பு நிலை என்று அழைக்கப்படலாம். எகிப்தில் இருந்து இஸ்ரவேலர் புறப்பட்ட இரவு வேளையில் தேவனால் "கடந்து போகப்"பட்ட முதற் பேறானவர்கள் யாவரும் அவருக்கு விசேஷித்த ஊழியக்காரர்களாகப்

*பரிசுத்தப்படுத்தப்பட்டனர் (யாத். 13:11-15; எண். 3:13). அவர்கள் தேவனுக்குப் பரிசுத்தமானவர்களாய் இருந்தார்கள்.*

*பதிலீட்டு நிலை என்பது இரண்டாம் வளர்ச்சி நிலையாக உள்ளது. முதற்பேறானவர்களுக்குப் பதிலீடாக இருக்கும்படியும், பொற்கன்றுக் குட்டியை மக்கள் ஆராதித்த பொழுது, உண்மை நிறைந்த ஆராதனைக்கு வெகுமதியாக இருக்கும்படியும் லேவி கோத்திரத்தில் இருந்தவர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டார்கள் (யாத். 32:25-29). இந்தக் கோத்திரமானது தொடக்கத்தில், எகிப்திலிருந்து வெளிவந்த முதற்பேறானவர்களுக்குப் பதிலீடாக்கப்பட்டது; ஆனால் அதற்கு பின்வரும் காலத்தில் பிறக்கும் முதற்பேறான எல்லா ஆண் பிள்ளைகளும், அவர்களின் பெற்றோர்களால் ஆலயப் பொருள் வைப்பறைக்கு ஐந்து வெள்ளிச் சேக்கல்கள் கொடுக்கப் பட்டும், ஏற்புடைய பலி ஒன்று அளிக்கப்பட்டும், மீட்டுக் கொள்ளப்பட வேண்டியவர்களாய் இருந்தார்கள்.*[4]

*பிறகு தேர்வு நிலை என்பது வந்தது. லேவிகோத்திரத்தைச் சேர்ந்த அம்ராம் என்பவரின் வீட்டார் உண்மையில் ஆசாரியத்துவ குடும்பமாய் இருக்கும்படி தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டார்கள். ஆரோன் என்பவர் முதலாவது பிரதான ஆசாரியரானார், மற்றும் அவருடைய மகன்கள் ஆசாரியர்களானார்கள். ஆரோனின் மகன்கள் உடன்படிக்கையின் கூடாரத்தில் தேவனுடைய பரிசுத்த ஊழியத்திற்கென்று பிரித்து வைக்கப் பட்டார்கள். இந்தக் குடும்பத்திலிருந்து வராத எந்த ஒரு லேவியனும் முறைப்படியான ஆசாரியராய் இருக்க முடியாது இருந்தது. மற்ற லேவியர்கள் பிரதான ஆசாரியருக்கும் மற்ற ஆசாரியர்களுக்கும் உதவியாளர்களாகச் செயல்பட வேண்டியிருந்தது.*

---

*ஒரு பரிசுத்தவான் என்பவர் பாவமற்ற தன்மை என்ற கருத்தில் முழுமை நிறைந்தவராக இருப்பதில்லை, ஆனால் முழுமையாக மன்னிக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தில் அவர் முழுமை நிறைந்தவராக உள்ளார்.*

---

*இஸ்ரவேலர்கள் சீனாய் மலையின் அடிவாரத்தில் பாளையமிறங்கியிருந்த வேளையில் ஆரோனும் அவருடைய மகன்களும் - நாதாப், அபியூ, எலெயெசார் மற்றும் இத்தாமர் - ஆசாரியர்களாகக் கர்த்தரால் நியமிக்கப் பட்டார்கள் (யாத். 28:1). அவர்கள் தங்கள் வலது காதுகளிலும், பெருவிரல்களிலும், காலின் பெருவிரல்களிலும் மோசேயினால் இரத்தம் தடவப்பட்டு அது தேவனுடைய ஊழியத்திற்கு அவர்களின் முழுமையான உறுதிப்பாட்டை அடையாளப்படுத்த, அந்த இரத்தத்தின் மூலம் இந்த ஊழியப்பணிக்கென்று பரிசுத்தப்படுத்தப்பட்டனர் (லேவி. 8:23, 24). ஆரோனும் கூட பிரதான ஆசாரியன் என்ற தம் பரிசுத்த நிலைப்பாட்டைக் குறிப்பதற்கென்று "பரிசுத்த தைலத்தினா"லும் அபிஷேகம் செய்யப்பட்டார் (லேவி. 4:3, 5; 8:12).*

*இந்த வழி முறைகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள் பழைய*

ஏற்பாட்டு யுகத்தில் தேவனுடைய பரிசுத்த ஊழியத்திற்கென்று தனியே பிரித்து வைக்கப்பட்டனர். அவர்கள் ஆசாரியர்கள் என்று அழைக்கப் பட்டனர் மற்றும் தேவனுக்கு முன்பாக ஊழியம் செய்ய அவர்களுக்குத் தனிச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது (யாத். 29:44). அவர்கள் சிலாக்கியத்தின்/அனுகூலத்தின் உறவுமுறையில் இருந்தார்கள், ஆனால் அவர்கள் தங்கள் அழைப்புக்கு இசைவான வகையில் தேவனுக்கு முன்பாக நடப்பதில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதாய் இருந்தது. அந்நிய அக்கினியை உபயோகப்படுத்தினதால் நாதாபும் அபியூவும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, அவர்கள் தேவனுக்கு முன்பாகப் பரிசுத்த மாக்கப்பட்ட ஆசாரியர்களாக நின்ற போதிலும் கொல்லப்பட்டனர் (லேவி. 10:1, 2).

பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இஸ்ரவேல் இனத்தைப் போலவும் தெய்வீகமாகத் தேர்ந்து கொள்ளப்பட்ட ஆசாரியர்களைப் போலவும், சபையானது கிறிஸ்துவின் யுகத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களைக் கொண்டுள்ளது (1 பேது. 2:9). சபையானது கர்த்தருக்குப் பரிசுத்தமானதாக உள்ளது, இது அவருக்கென்று “பிரித்து வைக்கப்பட்ட” மக்களால் ஆனதாக உள்ளது. சபையைப் பற்றிப் பேதுரு, “ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்” (1 பேது. 2:5) என்று கூறினார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் சபையார் என்பவர்கள் ‘‘பரிசுத்தமானவர்களாக’’ அல்லது பரிசுத்தவான்களின் சபையாக உள்ளனர்.

எல்லாக் காலத்திலும் மிகக் கொடுமையான தொடர் கொலைகாரனாக வரலாற்றில் கருதப்படுபவனாக இருக்கக் கூடிய ஜெஃப்ரீ தாமர் என்பவர், பரிசுத்தவான் பற்றிய தேவனுடைய கண்ணோட்டத்தின் சமீபத்திய விவரிப்பாக இருப்பார். மனிதர்களும் பையன்களுமாகப் பதினேழு பேரைக் கொன்றதற்காகக் குற்றம் சாட்டப்பட்ட அவருக்கு பரோலில் (தப்பிக்க முயல மாட்டேன் என்ற வாக்குறுதியின் பேரில் சற்று காலம் விடுதலை செய்யப்படுதல்) வெளிச் செல்ல அனுமதியின்றி, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது, இருப்பினும் நாம் அறிந்துள்ள வரையில், அவர் ஒரு பரிசுத்தவானாக ஆகியுள்ளார்.

உலக வேதாகமப் பள்ளியின் ஆசிரியர்களில் இருவரான கர்ட்டிஸ் பூத் மற்றும் மேரி மோட் ஆகியோர் தொலைக் காட்சி மற்றும் செய்தித் தாள்களின் மூலம் ஜெஃப்ரியைப் பற்றிக் கேள்விப்பட்டு அவருக்கு உலக வேதாகமப்பள்ளியின் அஞ்சல் வழி வேதாகமப் பாடங்களை அனுப்பி வைத்தார்கள். அந்தப் பாடங்களைக் கவனமாகப் படித்த ஜெஃப்ரீ பதில் எழுதியதோடு, தாம் ஞானஸ்நானம் பெற விரும்பியதையும் அவர்கள் இருவருக்கும் எழுதினார். ஒரு சில வாரங்களுக்குள், மே 10, 1994ல் ஜெஃப்ரீ அடைபட்டிருந்த சிறைக்குச் சென்று அங்கிருந்த தொட்டி ஒன்றில் அவரை ஞானஸ்நானப்படுத்துவதற்கு சகோதரர் ராய் ராட்கிளிஃப் செல்லுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஜெஃப்ரீ தமது ஞானஸ்நானத்தைத்

தொடர்ந்து, ஒவ்வொரு வாரமும் ராயுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படித்து, கிறிஸ்துவுக்குள் வளர்ந்து, அவருக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பை விரும்பிக் கொண்டிருந்தார். நவம்பர் 28, 1994ல் அந்தச் சிறையில் இருந்த குளியலறை ஒன்றில் ஜெஃப்ரீ அடித்துக் கொல்லப்பட்டார். அவருடைய மரணத்தைச் சுற்றிலும் நடந்தவற்றைப் பற்றிய எல்லா விபரங்களையும் நாம் அறிவதில்லை, ஆனால் ஜெஃப்ரீ தனது மரணம் வரைக்கும் கிறிஸ்துவுக்கான தமது உறுதிப்பாட்டில் உண்மையாய் நிலைத்திருந்தார் என்று ராய் நம்பினார்.

சுவிசேஷம் என்பது - மிக மோசமான, மிக நல்ல மற்றும் இவற்றிற்கு இடைப்பட்ட நிலையில் உள்ள ஒவ்வொருவர் ஆகிய - எல்லாருக்கு மானதாக உள்ளது. ஜெஃப்ரீ தாமர், கிறிஸ்துவுக்கான தமது மனமாற்றத்தில் ஒரு பரிசுத்தவானாகி தமது மரணம் வரையில் ஒரு பரிசுத்தவானாக நிலை நின்றார். இவர், நம்மில் பெரும்பாலோரால், அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான குற்றவாளிகளில் ஒருவராக நினைவுகூரப்படுவார் என்றாலும், தேவனுடைய ஆச்சரியமான கிருபையினிமித்தம் அவர் தமது வாழ்வின் கடைசி ஆறு மாதங்களில் ஒரு பரிசுத்தவானாக வாழ்ந்திருந்தார்!

தேவன் நம்மை நமது பாவங்களில் *இரட்சிப்பதில்லை* ஆனால் நமது பாவங்களில் இருந்து *இரட்சிக்கின்றார்* - ஏனெனில் அவர் தமது இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நம்மிடம் விசுவாசத்தையும் கீழ்ப்படி தலையும் கேட்கின்றார். அவர் நமது தவறுகளைப் பரிசுத்தப்படுத்து வதில்லை, ஆனால் அவைகளிலிருந்து அவர் நம்மை இரட்சிக்கின்றார். விசுவாசம், மனந்திரும்புதல், இயேசுவை அறிக்கையிடுதல் மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் ஒருவர் கிறிஸ்துவிடம் வருகையில், அந்த நபரின் பாவத்திலிருந்து அவரை இயேசு சுத்திகரித்து அந்த நபரை அவர் (இயேசு) தம்முடைய ஊழியத்திற்கென்று பிரித்து வைக்கின்றார். பரிசுத்தவான் என்பவர் *தவறற்றவராக* இருக்க முடியாது, ஆனால் தேவனுடைய கிருபையினால் அவர் *குற்றம் சுமத்தப்படாதவராய்* இருக்க முடியும். பரிசுத்தவான் என்பவர் பாவமற்ற தன்மை என்ற கருத்தில் முழுமை நிறைந்தவராக இருப்பதில்லை, ஆனால் முழுமையாக மன்னிக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தில் அவர் முழுமை நிறைந்தவராக உள்ளார்.

## சொற்றொடர் செயல்படுத்தப்படுகின்றது

''*பரிசுத்தவான்களுடைய சபைகள்*'' என்ற சொற்றொடரானது மதிப்புயர்ந்த ஒரு பட்டப் பெயராக உள்ளது, மற்றும் இது, சபையாரால் இருதயத்தில் பதியச் செய்யப்பட வேண்டும். தேவன் தம்முடைய மக்களை "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கின்றார்! இந்த இயற்பெயரானது நம்மீது என்னவொரு செயல்தாக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்!

நாம் இதை *ஏற்றுக்கொள்ள* வேண்டும். தேவன் தமது சபைக்குத் தாம் கொண்டுள்ள நோக்கத்தை நமக்கு நினைவூட்டுவதற்காகத் தம்முடைய சபைக்கு இந்த அடையாளத்தைக் கொடுத்தார். நாம் அவருடைய தனிப்பட்ட மக்களாக, அவருடைய சொந்த உடமையாக இருக்க

வேண்டும் என்று அவர் சித்தம் கொண்டுள்ளார். தேவனுடைய ஆராதனை மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கென்று பிரித்து வைக்கப்பட்ட மக்களாக நம்மை நாம் கண்ணோக்க வேண்டும்.

நாம் இதைப் *பாராட்ட* வேண்டும். தேவனுடைய தேர்ந்து கொள்ளப் பட்ட மக்களாய் இருப்பதின் மதிப்பைப்பற்றி நினைத்துப் பாருங்கள். இதைக் காட்டிலும் அதிகமாக உணர்வூட்டக் கூடியது எது? இதைக் காட்டிலும் அதிகமாக நம்மை உற்சாகமூட்டக் கூடிய வேறு சொற்றொடர் எது? நாம் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகச் சுவிகரித்துக் கொள்ளப் பட்டுள்ளோம் (எபே. 1:5). அவர் தம் அன்பை நம் இருதயங்களுக்குள் பாயச் செய்து நம்மை அவரது சுதந்திரர்களாக்கியுள்ளார்!

நாம் இதை *நடைமுறைப்படுத்த* நாட வேண்டும். கிறிஸ்தவரின் நடைமுறையானது அவரது தகுதி நிலையுடனும், அவரது நடக்கையானது அவரது நம்பிக்கையுடனும் பொருத்தமுடையதாயிருக்க வேண்டும்!

"பரிசுத்தவான்" என்ற வார்த்தையானது நமக்கென்று அமைத்துள்ள தராதரத்தின்படியாக வாழ்வதற்கு நாம் மிகவும் அடிக்கடி தவறி விடுகின்றோம். நாம் நமது எஜமானருக்குச் சீஷர்களாக அல்லது மாணவர்களாக இருக்கின்றோம் (அப். 11:26), ஆனால் நாம் எப்பொழுதுமே சீஷர்களைப்போல் செயல்படுவதில்லை. சில வேளைகளில் கிறிஸ்துவை சேர்ந்தவர்கள் கூடி வருகையில் மெத்தனமாக இருந்து விடுகிறார்கள், அவர் போதிக்கையில் கேட்பதற்கு மந்தமாக இருந்து விடுகிறோம், மற்றும் ஒழுங்கில் குறைவுபட்டு விடுகிறோம் (எபி. 5:11). நமது நடக்கையை நாம் நமது உறுதிப்பாட்டிற்கு இயைந்த வகையில் கொண்டு வருவதற்கு, நமது வாழ்வை நமது அன்பிற்கு இயைந்த வகையில் கொண்டு வருவதற்கு நாம் மிகவும் அதிக ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.[5]

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு பரிசுத்தவானாகவே இருக்கின்றார், மற்றும் அவர், தாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராக நடக்கும் வகையில் வாழ்வதற்கு நாட வேண்டும் (எபே. 4:1). நாட்டுப்புறத்து நண்பர் ஒருவர் இதை விவரிக்கின்றபடி, "முதலில் இதை நீங்கள் நம்ப வேண்டும். பின்பு நீங்கள் இதன்படி நடந்து கொள்ள வேண்டும்."

நாம் தேவனுடைய "மிக உண்மையான" மக்களாக - "பரிசுத்தமுள்ளவர் களாக" அல்லது "பரிசுத்தவான்களாக" - அவர் நமக்குக் கொடுத்துள்ள விவரிப்பின்படி இருக்குமாறு அவர் நமக்கு அறைகூவல் விடுக்கின்றார்! தேவன் நம் ஒவ்வொருவருடைய பெயரையும் "பாவி" என்பதிலிருந்து "பரிசுத்தவான்" என்று மாற்றியுள்ளார், நமக்குள் தமது பரிசுத்த நோக்கத்தை நிரப்புவதற்காகவே அவர் இவ்வாறு செய்துள்ளார்!

## முடிவுரை

தேவன் தமது சபையை எவ்வாறு காண்கின்றார்? பவுலின் கூற்றுப்படி, அவர் நம்மை நிகழ்காலத்தில், இப்பொழுதே பரிசுத்தவான்களாகக் காண்கின்றார். அவர், "எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாளில் எனது பிள்ளைகளில் இரண்டொருவர் பரிசுத்தவான்களாகலாம்" என்று

கூறுவதில்லை. அவர், “எனது சபை என்ற வகையில் நீங்கள் யாவரும் என்னுடைய பரிசுத்தவான்களாய் இருக்கின்றீர்கள்!” என்றுதான் கூறுகின்றார்.

பழைய கதை ஒன்றின்படியாக, ஒரு நாள் சலவைக் கல் பாளம் ஒன்று மைக்கேல் ஆஞ்சலோவின் பணிக்கூடத்திற்குள் அவரது மேற்பார்வையின் கீழாகவே கொண்டு வரப்பட்டது. கூலியாட்கள் அந்தக் கனத்த சுமையை முரட்டுத்தனமாக, கவனமின்றிக் கையாண்ட பொழுது மைக்கேல் ஆஞ்சலோ, “அந்தப் பாளத்தைக் கையாளுவதில் எச்சரிக்கையாய் இருங்கள்! அதற்குள் ஒரு (தேவ) தூதன் இருக்கின்றான்!” என்று அவர்களிடம் சத்தம் போட்டார். அதிகமான உடல் உழைப்பின் பளுவான அந்நாளின் வேலையை முடிப்பதில் மட்டுமே சிந்தை கொண்டிருந்த வேலையாட்கள் அவரது கடிந்து கொள்ளுதலைக் காணாது விட்டார்கள். கூலியாட்கள் விரைவில் சென்று விட, அமைதியான பணிக் கூடத்தில் தலை சிறந்த அந்தச் சிற்பி, சலவைக் கல் பாளத்துடன் தனிமையில் இருந்தார். பல காலமாகத் தமக்குப் பாராட்டுப் பெற்றுத் தந்திருந்த தம்முடைய திறமை மற்றும் கலை நுணுக்கத்துடன் மைக்கேல் ஆஞ்சலோ அந்தக் கற்பாறையை செதுக்கத் தொடங்கினார். அளவிடுதல், செதுக்குதல், உருவாக்குதல்/உருப்படுத்துதல் மற்றும் மெருகேற்றுதல் ஆகியவற்றில் நாட்கள் பல கடந்து சென்ற பிறகு, கூட்டுப் புழுவிலிருந்து வண்ணத்துப் பூச்சி வெளியேறுவது போல, அக்கற்பாளத்திலிருந்து ஒரு (தேவ) தூதன் வெளிப்பட்டான். அச்சிலையானது எந்த வேளையிலும் பேசவோ அல்லது பறக்கவோ கூடும் என்று ஒருவர் எதிர்பார்க்குமளவுக்கு அது உயிருள்ளது போன்ற வடிவமைப்புடையதாக இருந்தது. அந்த சலவைக் கல்லினுள் மைக்கேல் ஆஞ்சலோ தரிசனத்தின் கண்ணுடன் தாம் மட்டுமே கண்டிருந்த ஒன்றினை வெளிக் கொண்டு வந்தார்! அவர் ஒரு பெரிய கல்லை தூதன் என்று அழைத்து, பிறகு வேலை செய்து ஒரு தூதனை அதிலிருந்து வெளிக் கொண்டு வந்தார்!

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு பாவியாகவே தேவனிடத்திற்கு வந்தார். பயிற்சியற்ற ஆவிக்குரிய கண்களுக்கு நாம் மனிதக் கற்களாக உதவியற்ற, நம்பிக்கையற்ற, நோக்கற்ற மற்றும் பயனற்ற வகையில் இருப்பதாகக் காணப்பட்டோம். உண்மையான தலைமைச் சிற்பி நம்மை எடுத்து தமது தனிப்பட்ட திட்டத்தின்படி நம்மை உருவாக்கினார். நாம் என்னவாக இருந்தோம் அல்லது எவ்வாறு இருந்திருந்தோம் என்பதை அவர் நோக்காமல், நாம் என்னவாக முடியும் என்பதையே நோக்கினார். அவர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் “பரிசுத்தமான ஒருவரை” கண்டார்.

அவருக்கு நாம் மனமாறிய வேளையில், அவர் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நமது பாவங்களைக் கழுவி, நம்மைப் பரிசுத்தவான்களென்று அழைக்கத் தொடங்கினார். பரிசுத்தவான் என்பவர் இந்த வாழ்க்கையில் பணி தீர்ந்த ஒரு உற்பத்திப் பொருளாகத் தோற்றமளிக்க மாட்டார்; ஆனால் தேவன் நம்மை ஒவ்வொரு நாளும் செதுக்குகையில், அவர் விரும்பும் வகையில் இருப்பதற்கு அண்மையில் தம்மை நெருக்கமாய் கொண்டு வருகின்றார். மிக முக்கியமான சத்தியம் இதுதான்: நாம் அவருடைய சித்தத்திற்கு இணங்கி அன்றாடம் அவருடைய தெய்வீக உளியின் செதுக்குதலுக்கு நம்மைக் கீழ்ப்படுத்துகின்றோம். நாம் இப்பொழுது பரிசுத்தவான்களாய்

இருக்கின்றோம், நாம் இன்னும் அதிகம் அதிகமாய்ப் பரிசுத்தப்படுத்தப் பட்டு, இன்னும் அதிகம் முழுமையாய் அவருடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுத்து வைக்கப்படுவோம், இது நாம் அவருடைய பிரசன்னத்தில் வாழ்கையிலும், அவருடைய சாயலுக்கொப்ப அதிகம் முழுமையாக வடிவமைக்கப்படும் செயல்பாட்டில் தொடருகையிலும் ஆகும்.

*பரிசுத்தவான் என்ற வார்த்தையின் நிறைவுப் பகுதியானது இரு பாகமான வினாவாக உள்ளது: முதலாவது, நான் ஒரு பரிசுத்த வானாகியிருக்கின்றேனா? இரண்டாவது, நான் ஒரு பரிசுத்தவானாக இருந்தால், எனது பெயருக்கேற்றபடி நான் வாழ்கின்றேனா?*

---

குறிப்புகள்

*[1]இந்தத் தொடக்க கால சபைகள், தங்களை வழிநடத்தப் புதிய ஏற்பாட்டைக் கொண்டிருந்ததில்லை, ஏனெனில் அது முழுமையாக்கப்பட்டிருந்ததில்லை; இவ்விதமாக தேவன் அவர்களுக்கு ஆவியானவரின் அற்புத வரங்களைக் கொடுத்ததினால் அவர்களின் தேவைகளை நிறைவேற்றியிருந்தார். வேத வசனங்களின் இப்பகுதியில் (1 கொரி. 12:8-11; 12:28-30) வரங்களின் இரு அட்டவணைகள் தரப்பட்டுள்ளன. அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் இந்த வரங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன (அப். 8:14-17). புதிய ஏற்பாடு நிறைவு செய்யப்பட்டு, கடைசி அப்போஸ்தலர் மரித்து, அப்போஸ்தலர் தங்கள் கைகளை வைத்து ஜெபித்திருந்தவர்களில் கடைசியான வரும் மரித்த பொழுது, அற்புத வரங்கள் ஒழிந்து போயின. இன்றைய நாட்களில் நமது வழிகாட்டியாகவும் நிலைப்பாட்டின் ஆதார மூலமாகவும் புதிய ஏற்பாட்டை மட்டுமே நாம் பெற்றுள்ளோம். [2]அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைக் கொண்டிருந்தார்கள், ஆனால் தங்களுக்குத் தரப்பட்டிருந்த வெளிப்படுத்துதல்களை அவர்கள் ஒழுங்கான முறையில் அறிவிக்க வேண்டியிருந்தது, அவர்கள் ஒரே வேளையில் இருவர் பேசாமலும், ஒருவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில் இன்னொருவர் தமது வெளிப்படுத்துதலைக் கொண்டு இடைமறித்துப் பேசாமலும் இருக்க வேண்டியதாயிற்று (1 கொரி. 14:27, 29). சபையில் ஏதாவதொரு வகையில் பெண்கள் பேசிக் கொண்டிருந்து அதன் மூலம் அவர்கள் இந்தக் குழப்பத்தை அதிகமாக்கியிருக்க வேண்டும் (1 கொரி. 14:34-36). [3]எழுபத்தி ஐந்து பேர் சென்றதாக ஸ்தேவான் கூறினார் (அப். 7:14). எழுபது பேர்கள் சென்றதாகப் பழைய ஏற்பாடு கூறுகின்றது (ஆதி. 46:27; யாத். 1:5).* LXX *என்று அழைக்கப்படுகின்ற எபிரெயப் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில், ஆதி. 46:27ல் எழுபத்தி ஐந்து பேர் என்றுதான் உள்ளது. இதில், மனாசேயின் இரண்டு மகன்களின் பெயர்களையும், எப்பிராயீமின் இரண்டு மகன்களின் பெயர்களையும், மற்றும் எப்பிராயீமின் பேரன் ஒருவனுடைய பெயரையும் கூட்டியதால் எழுபத்தி ஐந்து பேர்கள் ஆக்கப்பட்டுள்ளது. ஸ்தேவான் அநேகமாக* LXX *(செப்துவஜிந்த் அல்லது எழுபதின்மரின் மொழிபெயர்ப்பு) புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டியிருக்க வேண்டும். [4]இஸ்ரவேலர்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்படுகையில் லேவியர்களின் கணக்கெடுப்பு நடைபெற்றது (எண். 3:11-51). லேவியர்களின் எண்ணிக்கை 22,000 என்றிருந்தது. எகிப்திலிருந்து வெளியேறிய தலைப்பேறான வர்கள் மொத்தம் 22,273 பேர் இருந்தனர். இவையிரண்டிற்கு மிடையே உள்ள வேறுபாடு 273 ஆகும். முதற்பேறானவர்களின் ஒவ்வொரு நபருக்கும் பதிலாக இந்த*

*22,000 பேர் தேவனுடைய ஊழியத்திற்கென்று வைக்கப்பட்டனர்; எஞ்சியிருந்த 273 பேர் தலைக்கு ஐந்து சேக்கல் வீதம் கொடுத்து மீட்கப்பட்டனர். இந்த மொத்தத் தொகையான 1,365 சேக்கல்கள் ஆரோனுக்கும் அவருடைய குமாரர்களுக்கும் கையளிக்கப்பட்டது. [5]கிறிஸ்துவுக்கு உண்மையற்ற வராய் ஆகின்ற பரிசுத்தவான் நித்திய ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டிருப்பதில்லை (1 கொரி. 9:27) ஆனால் அவர் இன்னமும் தேவனுடைய குடும்பத்தில் தவறு செய்கின்ற ஒரு உறுப்பினராய் இருப்பார். ஒருவர் கிறிஸ்துவினின்று விழுந்துபோய், தாம் அறிந்தவற்றிலேயே மிகவும் மோசமான நிலைக்குத் திரும்பக் கூடும் என்று பேதுரு சுட்டிக்காண்பித்தார் (2 பேது. 2:20-22).*

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *செய்தித் தொடர்பு என்பது உண்மையில் எவ்வளவு கடினமானதாக உள்ளது என்பதற்கு விவரிப்பு ஒன்றைக் கொடுக்கவும்.*
2. *புதிய ஏற்பாட்டில் "பரிசுத்தவான்" என்ற வார்த்தை எவ்வளவு சீராகப் பயன்படுத்தப்படுகின்றது?*
3. *முதல் நூற்றாண்டில் அற்புத வரங்களின் பயன்பாட்டைப் பற்றி விளக்கவும்.*
4. *பரிசுத்த ஆவியானவர் வழங்கிய அற்புத வரங்கள் எத்தனை?*
5. *தகுதி நிலையில் பரிசுத்தவானாக இருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது?*
6. *ஒருவரிடம் பரிசுத்தவானுக்குரிய நடக்கையில்லையென்றால் அவர் இன்னும் பரிசுத்தவானாக இருக்கின்றாரா?*
7. *''பரிசுத்தவான்கள்'' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் "சபையார்" என்ற வார்த்தைக்குப் பதிலாகப் பயன்படுத்தப் படுகின்றதா? அப்படியானால் எங்கு?*
8. *பழைய ஏற்பாட்டு எழுத்தாளர் ''பரிசுத்தம்'' என்ற வார்த்தையை இஸ்ரவேலரைக் குறிப்பதற்கு எங்காவது பயன்படுத்தியுள்ளார்களா? அப்படியானால் எவ்வாறு?*
9. *ஆசாரியத்துவத்தின் உருவாக்கத்தினுடைய பல்வேறு படிகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.*
10. *1 பேதுரு 2:9ஐ ''பரிசுத்தவான்கள்'' என்ற கருத்துடன் தொடர்பு படுத்தவும்.*
11. *இந்தச் சொற்றொடருக்கு நாம் செய்ய வேண்டிய பதில்செயல் என்ன?*
12. *நமது பெயருக்கேற்றபடியாக நாம் எவ்வாறு வாழ வேண்டும்?*